இந்த சட்டமன்றம் நடந்து விட வேண்டுமென்று அவர்கள் அக்கறை காட்டுவதாலே உண்மையிலேயே ஆளும் கட்சியில் இருக்கிற எங்களுக்கு கொஞ்சம் சலுகைகள் குறைவாக இருக்கிறது. மற்றவர்களுக்கு சலுகைகள் அதிகமாக இருக்கிறது. இதை நாங்கள் அனுமதிக்கிறோம். இங்கே எங்களுடைய உறுப்பினர்கள் எவ்வளவு வேதனைபடுகிறார்கள் என்பதை நான் இங்கே சொல்லிதான் ஆக வேண்டும். மற்றவர்களுக்கு இருக்கிற அந்த வாய்ப்புகள் ஆட்சிக் கட்டிலிலே இருக்கிறவர்களுக்கு இல்லை. காரணம் நமது வீட்டு குழந்தை பேசாமல் இரு என்று அவர்கள் சொல்லிவிடுகிறார்கள். நாங்கள் கஷ்டப்படுகிறோம், எப்படியாவது சுமுகமாக நடக்கட்டும். ஆகவே உண்மையை நிரூபிப்பதற்கு எங்களுக்கு வாய்ப்பு குறைவாக இருக்கிறது, என்று சொன்னாலும், மூன்று, நான்கு மாதங்களில் இந்த விஷயத்தைப் பற்றி உண்மைகள் வெளி வரப்போகிறது. அதுவரையில் தான் இந்த அறிக்கை வேலை செய்யும். தேர்தல் வந்தால் பயன்படும் என்று பார்த்துக் கொள்வார்களே தவிர உண்மை என்ன என்பது நீதிமன்றத்திலே ஆதாரங்கள் வெளி வருகிறபோது, அதற்குரிய விவரங்கள் வெளி வருகிற போது உண்மை வெளிவரும் என்பதை சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

4. அறிவிப்புகள்.

அ. மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1982.

நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு, 1982.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவுகள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற்று பரிந்துரைகள் எதுவுமின்றி திருப்பியனுப்பப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ் நாடு 1982–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 22/1982).

2. தமிழ் நாடு 1982–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண். 2) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 26/1982).

5. கவன ஈர்ப்புகள்:

(அ) கைத்தறி நெசவாளர்களுக்குக் கொடுக்கப்படுகின்ற நூல் மற்றும் கூலி குறைக்கப் பெற்றிருப்பது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS